தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஶு பங்குனி மீ 19 உ (1-4-'23.) | ப. 47.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 473
2. கண்ணப்ப நாயனூர் ... 474
[துகளன்.]
3. தேக சௌக்கியமும் ஆகாரமும் 475
[V. பாலசுந்தரம் B. A. B. L.]
வட இந்தியாவிலுள்ள சில
4. புண்ய க்ஷேத்திரங்கள் ... 476
[K. R. R. சாஸ்திரி, M. A., F. R. Econ's.]
5, புயற் காற்று ... 477
[V. நாராயணையர், M.A., M.L.,]

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்,

மைலாப்பூர், சென்னை.

உலக நடை

உப்பின் வரியை உயர்த்துவது கேடு விளைக்கும் என்று இந்தியச் சட்ட சபையோர் தங்களுடைய சம்மதத்தை மறுத்தும் இராஜப்பிரதிநிதி அவர்கள் வரியை இரட்டிக்கும்படி பொக்கிஷ மந்திரி கொண்டுவந்த தீர்மானத்தை தமக்குள்ள விசேஷ அதிகாரத்தால் சட்டமாக்கி விட்டனர். அந்த அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இது சரியான தருணமன்று என்றும் இந்த சந்தர்ப்பத்தில் இராஜப்பிரதிநிதி யவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் அதைச் சட்டமாக்குவதற்கு இடங்கொடுக்கவில்லையென்றும் தங்களுடைய அபிப்பிராயத்தை அறிவித்து ஸ்ரீமான்கள் தி. வி. சேஷகிரி ஐயர். தி. ரங்காசாரியார் முதலிய சட்டசபைப் பிரமுகர்கள் சொல்லியும் பயனில்லை.

* * *

தமிழ் நாட்டிலுள்ள "சுயராஜ்ஜிய கக்ஷியார்" மார்ச்சு-மீ 25-உ ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை மகா ஜனசபை மண்டபத்தில் கூடினர்; கூட்டத்திற்கு வந்தவர்களும் இனி அந்தக் கூட்டத்திற் சேருகிறவர்களும் ஒன்ருய் "தமிழ் நாடு சுயராஜ்ஜியக் கக்ஷியார்" என்ற பெயர் கொண்டு காரிய நிர்வாகங்களைச் செய்வதென்றும், அவர்களுக்கு அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் அ. அரங்கசாமி ஐயங்கார், உப அக்கிராசனாதிபதி ஸ்ரீமான்கள் தி. வி. கோபாலசாமி முதலியார், மௌலானா அப்துல் மஜீதுஷரார், காரியதரிசிகள் ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி ஐயரும், தி. ஆதிநாராயண செட்டியாரும், பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. வெங்கடரங்க நாயுடு என்றும் தீர்மானிக்கப்பட்டது. வெளியூர்களில் வேலை செய்வதற்கும் தங்கள் கொள்கைகளைப் பரவச் செய்வதற்கும் உபந்நியாசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூடிய சீக்கிரத்தில் ஒரு சபை கூட்டி தங்களுடைய அபிப்பிராயங்களை நிர்ணயிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

காலஞ்சென்ற கோகலே அவர்கள் பெயரிட்ட மண்டபம் ஒன்று பூனா நகரில் கட்டுவதற்காக அளிக்கப்பட்ட பொருள் இது வரை ரூ 58,000 ஆயிருக்கிறதாம். அதற்கு கோகலே அவர்கள் புத்திரி ஆனந்தபாய் தாமலே என்பவர் ரூ 5000 கொடுத்திருக்கிறார்களாம்.

* * *

ஸ்திரீகள் வக்கீல்களாககோர்ட்டுகளில் பேசலாமோ என்பதைப்பற்றி கோர்ட்டுகள் சந்தேகப்பட்டன. கல்கத்தா கோர்ட்டு கூடாது என்றது. பாட்னா கோர்ட்டும் கல்கத்தாவைப் பின்பற்றியது. அலஹாபாத்து கோர்ட்டு கூடுமென்றது. இவ்விதம் அபிப்பிராய பேதம் ஏற்படவே சந்தேக நிவர்த்திக்காக ஸ்திரீகள் வக்கீல் வேலையில் அமரலாம் என்ற மசோதா ஒன்று சட்டசபைகளில் கொண்டுவரப்படவே, அது இருசபையாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

கண்ணப்ப நாயனார்.

(துகளன் எழுதியது.)

நலத்திற்றிகழ் திருக்காளத்தியார் திருநெற்றி யின்மே
வலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண்டுண்ண வெந்தி
நிலத்திற் கடுங்கணை யாற்றன் மலர்க் கண்ணிடந்தப்பி [னான்.
குலத்திற் கிராதனங் கண்ணப்பனுமென்று கூறுவரே
—திருத்தொண்டர் திருவந்தாதி

காளத்தித் தலத்தையும் கண்ணப்ப நாயனாரை யும் கவிகள் உகந்து பாடியிருக்கின்றனர். காளத்தி புராணத்தில் இவை விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. சேக்கிழாரும் இந்நாயனார் புராணத்தை விரித்துரை செய்திருக்கின்றார். நக்கீர் கல்லாடர் ஆகிய பொய்யிலா புலவர் இருவரும் இவரது திருமறத்தைச் சிறப்பித்திருக்கின்றனர்.

அறியாமலேனு மறிந்தேனுஞ் செய்து
செறிகின்ற தீவினைகளெல்லா-நெறி நின்று
நன் மூகில் சேர் காளத்தி நாதனடி பணிந்து
பொன் முகரிம் யாடுதலு போம்.

என்றபடி புண்ணிய மிகுந்ததாய் கற்றவர் களெத்தும் சீர்காளத்தி மலையெனப் போற்றப் பெற்றது திருக்காளத்தி.

வேயனைய தோளுமை யொர்பாக மதுவாக விடையேறி சடை மேல்
தூய மதிசூடி சுடுகாடினடமாடி மலை தன்னை வினவில்
வாய் கலசமாக வழிபாடு செய்யும் வேடன் மலராகு [நயனம்
காய்கணையினாலிடந்தீ சனடி கூடுகாளத்தி மலையே

என்று இம்மலையையும் நாயனாரையும் பாடியுள்ளார் ஆளுடைப் பிள்ளையார்.

மனத்தகத் தாறலை மேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத் தானிமையவர் தஞ்சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலானிப்பாற் செம் பொன்
புனத்தகத்தார் நறுங்கொன்றைப் போதிலுள்ளான்
பொருப்பிடையாருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே.

என்று அப்பரும்,

கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியாய்
அண்டா! உன்னை யல்லாலறித் தேத்த மாட்டேனே

என்று சுந்தரரும்,

சந்தமாரகி லொரு சாதிதேக்கம் மரம்
உந்துமா முகலியின் கரையினிலுமை யொடும்
மந்தமார் பொழில் வளர்மல்கு வண் காளத்தி
எந்தையாரிணை யடியென் மனத்துள்ளவே.

என்று சம்பந்தருமாக இவ்வாறு மூவரும் மறவாத முதன் மூர்த்தியாய் அம்மலையின் கண்

தாழ்ந்த சடையுந் தவளத்திரு நீறும்
சூழ்ந்த புலியதளும் சூழரவும்
தோன்ற விளங்குகின்றார் காளத்தி நாதர்.

பண்டிதுவே யன்றாகிற் கேளீர் கொல் பல சருகு
கொண்டிலிங்கத்தும் பினூற் கூட்டிழைப்பக்-கண்டு
சலந்திக் கெலாமேத்துங் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு.

என்று சிலந்திக்கு அருளியதையும்,

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார் கொலந்தோ கிறிபட்டார்-கிளாடை
யண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்பராவர் கதை.

என்று கண்ணப்பர் கதையையும் நக்கீர்தேவர் பாடி யுள்ளதை நினைந்தே.

கற்றநற் சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டு நின் குரை கழலடைந்தேன்.

என்றார் சுந்திரமூர்த்தி சுவாமிகள்.

கண்ணப்ப நாயனாரின் பேரன்பை நினைத்து அவ்வகை யன்பு தம்மனத்து எழவில்லையே என்று வருந்தி மாணிக்கவாசக சுவாமிகள்

கண்ணப்ப னொப்ப தோரன் பின்மை கண்டபி
னென்னப்ப னென்னொப் பிலென்னையுமாட் கொண் [டருளி.

என்று இறைவனார் சௌலப்பியத்தைப் புகழ்ந்திருக்கின்றார்.

இவ்விதப் புகழ்கொண்ட நாயனார் பிறந்தது ஊனுண்ணும் கானவர் குலத்து; இவர் பயின்றது நால்வேதமன்று, வெந்திறற் சிலையோடு வேல் வாள் முதலிய படைக்கலங்கள்; தொல்லுயிர் கொல்லும் தொழிலே இவரது சாதித் தொழில். வேடர்க் கதிபதியாய இவர் தந்தை நாகன் என்பான் மூப்படைந்தபோது இவருக்குத் தன் பட்டஞ்சூட்டி "நீபோய் வேட்டையாடி, நாட்டவரை வருத்தும் விலங்குகளை வதைத்துவா" என்று அனுப்ப, வேட்டை வேகத்திலே காளத்தி மலையடிவாரத்துப் பொன் முகலியாற்றை யடைந்தார்; அப்போது மலை மீதிருந்த திருக்கோயிலைக் கண்டு கூட வந்தவனிடம் "யார் இங்கு உறைபவர்" என்று வினவ, அவன் "குடுமிச்சாமி; நாமும் கண்டு வரலாம்." என்றனன். வாலிப குதூகலத்தில் மலைமீது ஏறினார்நாயனார்; அங்குசென்று கண்ணுற்றதும் அரனார்பால் அவருக்கு அன்பு பெருகலாயிற்று; மிக்கதோர் விரைவினோடு மோகமாய் ஓடிச் சென்றார்; தழுவினார். மோந்து நின்றார்; நெடிது உயிர்த்து வடிவெல்லாம் புளகம் பொங்க, மலர்க் கண் நீரவிபாய, "அடியனேற்கு இவர் தாம் இங்கு அகப்பட்டார், அச்சோ!" என்று அதிசயித்து, சற்று நிதானித்து., "உம்முடன் துணையாய் உள்ளார் இங்கு ஒருவருமின்றே! இம்மலையிற் தனியே நீர் இருப்பதோ" என்று நைந்து "நான் கணட பின்னும் இவரைத் தனியராய் இருக்க விடுவதோ? இவர் அமுது செய்ய இறைச்சி கொணர்வாருமில்லையே இறைச்சிக்காக மலையினின்று. மிழிந்து செல்ல வேண்டுமே!" என்று

போதுவர் மீண்டுசெல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலினோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றுப் போல்வர்
நாதனே யமுது செய்ய நல்லமெல்லிறைச்சி நானே
கோதறத் தெரிந்துவேறு கொண்டிங்கு வருவேனென் [பார்.

இவ்வாறு ஈசனார் முன்னின்றும் அரிதில் நீங்கிச் சென்ற நாயனார், வேட்டையில் விரும்பி எய்த மிருகங்களை

விறகினிற் கடைந்த வெங்கனற் காய்ச்சி,
நறுவிய விறைச்சி நல்லது கண்டு,
அண்ணற் கமிர்தென்றது வேறமைத்து,
தண்ணறுஞ் சுனை நீர் தன் வாய்க் குடந்தான்

மஞ்சனமாக முகந்து, மலரெனக்
குஞ்சியிற்றுயர்க்குலை சொருகிக்
குனிசிலை கடுங்கணையதனொடு மேந்திக்
கனல் விழிக்கருங்குரளு (ல், நா)ய் பின் தொடர

யாவரும் வெருக்கோளுற்ற வெங்கடும் பகலில் மறுபடி மலை மீது ஏறினார் காளத்தி நாதரை வழிபடுவதற்கு.

அங்கு சென்றடைந்ததும் கோயிலில் பூசனை செய்யும் மறையோன் முன்னம் துகிலை இடைச்சுற்றி, தூரீராட்டி, விரை மலர் நறும்புகைவிளக்கு அவி கொண்டுபூசித்து ஏகியிருக்க, தானும் அவ்விறைவனாருக்கு பூசனைச் செய்யத் தொடங்கிதம் காற்செருப்படியால் முன் பூசனையைக்களைந்து தம் வாயினீர் அவர் மேனி மீது ஆட்டி தம் தலை தங்கிய துவர்ப்பூவை அவர் தலையேற்றி, இறைச்சியிற் பெரிதும் போனகம் படைத்து, கண்டு கண்டு, உள்ளம் கசிந்து, காதலிற் கொண்டதோர் கூத்து அக்கூத்தர் முன் ஆடி, அன்போடும் அவரது குரைகழலை இறுக இறைஞ்சி,

அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவ்விலங்குள வென்றஞ்சி மெய்ம்மையின் வேறு [கொள்ளாச்,
செவ்வியவன் புதாங்கித் திருக்கையிற் சிலையுந்தாங்கி
னமவரை யென்ன வையர் மருங்கு நின்ற கலா நின் [றார்.

இவ்வாறு பகல் முழுதும் போற்றி செய்து இராப் பொழுதும் அரனார் செம்மேனி காத்து நின்ற வீரர். வைகறையாமத்து அகன்று அரனாருக்குத் திருவமுது கொண்டு அணையவேண்டிக் காடு சென்றார், அத்தருவாயில் வழக்கப்படி வந்த அந்தணன். 'நாடொறும் நான் செய்யும் பூசனையை ஈங்கு ஒரு வேடுவன் நாயோடும் புகுந்து மிதித்து உழக்கிச்செருப்படியால் நீக்கி இறைச்சியை திருக்கோயிலில் இட்டுப் போகல் நீதியோ? " என்று ஏங்கி பின்பு பரிகரித்துப் பூசனை செய்வர்; இவ்வாறு ஆறிரவுகள் சென்ற பின், ஏழா நாள் ஈசனார் அவ்வந்தணனிடம் " அவ்வேடன் மாதவன்; அவன் செருப்படி என்விருப்பம்; அவன் வாய் ஒரு தூய பொற்குடம்; அதனிற் தங்கு நீர் கங்கையின் புனல்; அவனுகந் திட்ட இறைச்சி எனக்கு நன் மாதவர் இட்ட நெய் பால் அவியிற் சிறந்தது; அவன் என்பால் கலந்ததோர் அன்பை உமக்குக் காட்டுகிறேன் " என்று அவ்வந்தணனைத் தேற்றி அங்கு பதுங்கி இருக்கச் செய்து வழக்கம்போல்

கோலினேற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த மாட் போனகமுந்
தன்றலைச் சொருகியதண் பளித்தாமமும்
வாய்க் கலசத்து மஞ்சன நீரும்

கொண்டு நாயனார் விரைந்துவர அப்பொழுது கண்ணொன்றினின்றும், உதிர பொழியக் காட்டி நின்றார்.

வந்தவர் ஈசனார் குருதிகண்டார், மயங்கினார்; வாயில் நன்னீர் சிந்திட, கையில் ஊனும் சிதறி வீழ, கொண்டார் பள்ளித்தாமம் குஞ்சி நின்றலைந்து சோர, நிலம்படப்புரண்டு நெடிதினில் தேறி சிலைநெடும் படையை எடுத்து" இது படுத்தவர் அடுத்த இவ்வனத் திருப்பார்" என்று தேடியும் காணாமல் திரும்பவந்து அழுது விழுந்து தொழுது எழுந்து, என்செய்தாற் தீருமோதானெம் பிரானிற்றுத் தீங்கு என்று பல மருந்துகள் பிழிந்து வார்த்தும் புண்கணீர் குறைபடாது ஒழியக்கண்டு " இத்தனை தருக்கிலேன்; இதனைக்கண்ட என்தன்கண் தனை இடந்து இக்கண்ணுறு புண்ணில் அப்பிக் காண்பன் ஒருக்கால் அது மருந்தாகினும் ஆகும்." என்று தன் கண்ணை இடந்து அணைதர அப்பினார்;—அப்பலும் குருதி நின்றது. அதைக்கண்டு களித்த நாயனாருக்கு மற்றொரு கண்ணில் குருதி வழிவதாய் ஈசனார் தோற்றுவிக்கவே " இனி இதற்கஞ்சேன்; மருந்து கைக்கண்டேன் அன்றோ? " என்று தன் மறுகண்ணையும் உவப்புடன் இடந்து அப்ப எண்ணி இடம் தெரிவதற்காக ஈசனார் கண் புறத்து தம் இடக்கால் ஊன்றி கண்ணில் அம்பைப் பாய்ச்ச முன் ஈசனார்

" நில்லு, கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத்தோன்றல்! நில்லு கண்ணப்ப!" என்று தடுத்து இரு கண்களோடும் அநவரதம் தம்மை கண்டுகளித்துக்கைலாயமடையுமாறு வாழ்த்தினர் என்பது இவ்வடியாரின் அரிய சரிதை.

அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கையும் மதிாய முதிரன் பின் மிகுதியால் தம்மிரு கண்களையும் இடந்து அப்பத்துணிந்து இறைவனாருக்கு கண் அளித்த இவ்வள்ளலாரின் வண்மை விள்ளற் பாலதோ?

தேகசௌக்கியமும் ஆகாரமும்.

V. பாலசுந்தரம், B.A., B. L.

தற்காலத்தில் வியாதிகள் மிதமிஞ்சி எங்கு பார்த்தாலும் கூத்தாடுகின்றன. வைத்தியர்களுக்குக் கொண்டாட்டமும் விருத்தியாகிக்கொண்டு வருகின்றது. ஒரு மனிதனுக்கு நோயுண்டானால் அந்த வியாதி எதனாலுண்டாயிற்று, அது இனிமேல் நம்மை பாதிக்காமலிருக்க என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி அம்மனிதன் கொஞ்சம் கூட ஆலோசிப்பதில்லை. உடனே இரண்டு டாக்டர்களுக்கு நான்கு டாக்டர்களைக் கூப்பிட்டு அர்த்தமில்லாமல் அளவில்லாத மருந்துகளை சாப்பிட்டுவிட்டால்;—ஏதோ தன்னால் சாகாமலிருப்பதற்கு மனிதப் பிரயத்தினத்தில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்துவிட்டதாக நினைத்துக்கொண்டு பெரிய கொட்டாவி விட்டு, மற்றப்படி எல்லாம் தெய்வ சங்கல்பம் என்று சாய்ந்து விடுகிறான். பின், வியாதி ஜாஸ்தியாகிவிட்டால், அது தன்னுடைய புத்தியின்மையினாலா, அல்லது டாக்டருடைய மருந்தினாலேயா என்பதைப் பற்றி ஆலோசிப்பதில்லை. இந்த அசட்டுத்தன்மை நமது ஸ்திரீகளிடம் மிகவும் ஜாஸ்தியாகக் காணப்படுகின்றது. டாக்டருக்குப் பணம் கொடுப்பதைத் தவிர மற்றப்படி யெல்லாவற்றிற்கும் "சுவாமியிருக்கிறார்" என்று தயங்கி சும்மாயிராமல் நாம் ஆலோசிப்போமானால், நம்முடைய தேகஸ்திதி கெடுவதெல்லாம் நம்மாலேயே என்று ஏற்படும். நம்முடைய தேகஸ்திதி கெடாது காப்பாற்ற முயல்வோமானால், நமது ஆகாரத்தில் நாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டுமென்று ஏற்படும்.

சிலர் போசனத்திற்கு முன் "பூஜை" ஒன்று சொல்வதுண்டு. அதாவது சரீரம் ஒரு கோயிலாகவும், அதை ஒழுங்கான நிலையில் நிறுத்திவைக்கும் ஆகாரத்திற்கு" பூஜை" யாகவும் பாவனை. ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த சரீரக் கோயிலை காத்து வளப்பதே முதற்கடமை. அதற்கு நல்ல பரிசுத்தமான ஆகாரத்தை வேளை தவறாது ஒழுங்

காக அருந்தவேண்டும். மிதமிஞ்சி சாப்பிடும் ஒவ்வொரு பிடி யன்னமும் விஷமே. அகப்பட்ட சமயத்தில் அளவில்லாது சுவைகூடிய ஆகாரத்தை யருந்திவிட்டு அந்த போஜனவேளையில, வயிறு கனக்கின்றது, என்று பட்டினி கிடக்கும் ஒட்டகை போன்ற மனிதர்பலருண்டு. இப்பழக்கம் தேக ஹானிக்கு முக்கிய காரணமாய் விளையும். வயிறை நிறப்புவதிலேயே கண்ணும் கருத்துமா யிருக்கிறோமேயொழிய தேக தாரணைக்கு எவ்வளவு அவசியமென்பதைக் கவனிப்பதில்லை. சில பிரபல வைத்தியர்கள் இந்த விஷயத்தில் ஆராச்சிசெய்து நூற்றில் எழுபத்தைந்து மனிதர்கள் சாவதற்குக் காரணம் அளவுக்கு மிஞ்சின உணவு என்று தெரிவித்திருககிறார்கள். மேலும், லாகிரி வஸ்துக்களையும், நரம்புகளுக்கு உத்ஸாகத்தைக் கிளப்பிவிடும் காபி போன்ற பானங்களையும் உபயோகிக்காமலிருக்கவேண்டும். இவை தற்சமயத்துக்கு குதூஹலத்தைக்கொடுத்தாலும், முடிவில் நரம்புசக்தியையும், ஆயுளையும் குறைத்துவிடும். ஆகையினால், ஒவ்வொரு மனிதனும் இந்தமாதிரி விஷயங்களைப் பற்றி நன்றாக ஆலோசித்து தன் தேகத்தை தன் கோயிலென்றே மதித்து மற்ற விஷயங்களில் செலுத்தும் புத்தியை தன் சரீரபோஷணத்திலும் கவனமாக செலுத்துவானேயாகில், உலகத்தை வருத்தும் கஷ்டங்கள் அநேகம் நீங்கிவிடும். அம்மாதிரி ஊக்கமுள்ள மனிதன் சரீர ஸுகத்தை யறிவானேயொழிய வைத்தியனையும் மருந்தையும் தேடமாட்டான்.

வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

[By K. R. R. சாஸ்திரி M.A., F. R. Econ. S.

ஒரு பக்தனின் அபிப்பிராயம்.

சென்ற ஐந்து வியாஸங்களில் எனக்குத் தோன்றிய சில விஷயங்களைப்பற்றி வரையலானேன். மாலவன் குன்று முதல் குமரி எல்லைவரையில் தமிழ் நாடென்று எனது கிராமத்திலுள்ளோராகிய மஹாகவி பாரதியாரும் பாடியுள்ளார். இத்தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்கும் வட இந்தியாவிலுள்ள கோயில்களுக்கும் என்னே வித்தியாஸம்? நமது ஸம்பிரதாயங்களுக்கும் வட இந்தியாவிலுள்ள நமது ஸகோதரர் ஆகமங்களுக்கும் உள்ள தாரதம்ய மென்ன? நம்கோயிற் பிரவேச விஷயமாய் பத்திரிகைகளிலும், சில விடங்களிலும் புகார் கிளம்புகிறதே, இவை வட இந்தியாவிலுண்டா? இம்மாதிரியான கேள்விகளுக்கு எனக்குத் தோன்றும் ஸமாதானங்களைக் கூறுகிறேன்.

கோயில்களினமைப்பு.

நம் நாட்டில் 100-ஜனங்களுக்கு 80.4-வரை கிராம வாசிகளாகவாவது அல்லது விவசாயத்தில் ஸம்பந்தப்பட்டவர்களாகவாவதிருக்கிறோம். நம் கிராமங்களினமைப்பை உற்று நோக்குமிடத்து, கிழக்கு திக்கில் பரமசிவனாது கோயிலும், மேற்றிசையில் விஷ்ணுவாலயமு மிருப்பது வழக்கம். இம்மாதிரி வட இந்தியாவில் தென்படவில்லை. மேலும் நம் நாட்டில் எங்கு பார்த்தாலும் கோயில்களே. கல்கத்தாவாகிலுஞ்சரி, வேறு வங்காள கிராமமாகிலுஞ்சரி, கோயில்களைக் காண்பதே அரிதாயிருக்கிறது.

கோயில்களின் வெளித் தோற்றம்.

சுமார் அரைமைலுக்கப்பாலிருந்தே, ஆகாயத்தை யுலாவிச் செல்லுகின்ற விமானத்தைத் தரிசிக்கிறோம். விஷ்ணுவாலயமாயின் ஸ்தூபியையும் கண்டானந்திக்கிறோம். விசாலமான மதில்களென்ன, புஷ்கரணி, உட்பிராகாரங்கள், கொடி மரம் இவைகளை முக்கியமாய்ச் சொல்லலாம். ஆனால் வட இந்தியாவில் அநேகமாய், 5-அடி ஸமீபம் வந்தாற் கூட ஒரு கோயிலிருப்பதாகத் தெரியவே யில்லை. வீட்டு வாசல் மாதிரியே கோயில் பிரவேசமு மிருக்கிறது. ஒரே ப்ரகாரந்தானிருக்கிறது. வெகு நெருக்கடியான சிறிய அரைகளில் ஸ்வாமியை தர்சனம் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகம பேதங்கள்.

பஞ்சகால பூஜைகள், அபிஷேக விசேஷங்கள், தீபாராதனையின மஹத்வங்கள் முதலிய வெளித் தோற்றங்களின் சிறப்பை வட இந்தியாவிற் காணுவதரிது. ப்ருந்தாவனத்தில் ரங்கநாத ஸ்வாமி கோயிலையும், குஜராதி கிருஷ்ணன் கோயிலையும், உற்று நோக்குமிடத்து, இவ்வித்யாஸங்கள் நன்கு விளங்கும்.

வட இந்தியாவில் பக்தி விசேஷமே.

ஆனால், பூரி ஜகன்னாதம், ஸ்ரீ காசி யிவ்விரண்டு உத்தம க்ஷேத்திரங்களையு முற்று நோக்குமிடத்து. அவ்வளவு பக்தி தென்னிந்தியாவிற் காணப்படுகிறதா வென்ற கேள்வி ஒவ்வொரு நிமிஷமும் பிறந்து கொண்டே யிருக்கிறது. ஜகன்னாதரைத் தழுவி தர்சனம் செய்யும் பொழுதும், காசி விச்வநாதரை நம்மனமார அபிஷேகம் செய்து அர்ச்சித்துத் தழுவி தர்சனம் செய்யும் பொழுது முண்டாகும் ஆனந்த பாஷ்பம் நம் நாட்டில் ஓரிடத்திலும் நான் அனுபவித்ததில்லை. நம் தேசத்தில் வெளித் தோற்றங்களாலும், ஸம்பிரதாயங்களாலும் பக்தி, சக்தி, ச்ரத்தை உண்டாக வேண்டி யிருக்கிறது; அவ்விடத்திலோ, ஜீவாத்மா பரமாத்மாவிடம் லயமடைய வேண்டிய பெரிய தத்வத்தை ஒரு நிமிஷ நேரமாவது நாம் நன்குணர்வதற்கு ஸாதனங்களிருக்கின்றன. ஸ்ரீரங்க தர்சனம் பயத்தினால் பக்தியை யுண்டு பண்ணலாம், அழகர் கோயில் மூலவிக்ரஹமுமப்படியே; மதுரை மீனாக்ஷி தனது பெருமையை பக்த கோடிகளுக்கு ஜ்வலித்துக் காண்பிக்கலாம்; திருப்பதி வெங்கடாஜலபதி பக்த கோடிகளின் தியாகத்தை மெச்சலாம்; பழனி யாண்டவன் வெகு ஆவேசத்தை யுண்டு பண்ணலாம்; திருவானைக் காவலில் அப்பு லிங்கத்தின் பெருமை மெச்சத்தக்கதே; சிதம்பர ரகசியமோ இவையவ்வளவிலும் விசேஷமான தென்றே கருதுகிறேன். எனினும் ஒரு கேள்வி மாத்திரம் கேட்கிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ணரது தக்ஷிணேச்வரத்தில் வட விருக்ஷத்தினடியில் நான் ஏகாந்தமாய் வீற்றிருந்த பொழுதும், ஜகன்னாதரை நான் தழுவி தரிசித்த பொழுதும், ஸ்ரீகாசியில் விச்வநாதரது லிங்கத்தை நானே அர்ச்சித்த பொழுது மெனக்குண்டான பக்தி ஆவேசமும், மனதின் சாந்தமும், நான் தென்னிந்தியாவில் ஓரிடத்திலும் அனுபவித்ததில்லை.

ஆண்டவன் முன் எல்லோரு மொன்றே.

இப்பெருமையின் காரணமென்ன? ஜகன்னாதர் தர்சனம் யாரும் செய்யலாம். ஸ்ரீ காசியிலுமப்

படியே. மூலப்ராகாரத்தில் பிராமணர் மாத்திரம் போகலாமென்ற உரிமையை யனுபவித்து என்ன பக்தியை யடைந்து விட்டோம்? எப்பொழுது ஆதிப்ராமணனின் தபோ பலம் போய்விட்டதோ, செருக்கு மாத்திர மிருந்தென்ன பயன்? பகவான் ஒருவரையாவது தன்னருகில் வரக்கூடாதென்று சொல்லவேயில்லை. நந்தனார் பக்தியைவிட மேலான பக்திபை நான் ஸமீபத்திற் கேட்டதேயில்லை. தபோபல மிருக்குமாயின், மரியாதை தானுகவே வரும். சட்ட திட்டங்களும், வரை யருப்புக்களும் அப்பொழுது அவசியமேயில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடமும், விவேகாநந்த ஸ்வாமியிடமும் உலகிற்கெல்லாம் ஏன் அவ்வளவு பக்தி? ஜாதிமத பேத ரஹிதமான பகவானிடம் பக்தி வர வேண்டுமாயின் ஜாதிச் செருக்கையும், இதர ஜாதியார் தாழ்ந்தவரென்று க்ஷணே க்ஷணே ச்ரமப்படுவதும் நீக்கப்பட வேண்டும். கலியுகத்தில் பக்தி மார்க்கமே, மேலான தென்றுணர்ந்து நமது கோயிற்கள், புண்ய க்ஷேத்திரங்கள் தடாகங்களிவ்விடங்களில், அவசியமான சீர்திருத்தங்களைச் செய்வோமாக. அகில இந்தியாவுக்கே திலகங்களா யிருக்கிற காசியும் ஜகன்னாதமும், இந்த கொள்கையையே எனக்குப் புகட்டின. வெளித் தோற்றங்களல்ல, உண்மையான பக்தியே மேன்மையானது.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின்
குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமா
ன ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவ
னுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் செ
ன்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம்
கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்
போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும்,
அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த
கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும்
அவளும் கல்யாண காலத்தில் தன் புருஷன் முகத்
தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கண
வன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கம
லாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன்
மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்
ததும், ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்தி
ற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன்
இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன்
இராமேசன் பேசிக்கொண் டிருந்ததை நேரில் பார்த்து
இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண
ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன்
கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்ற
தும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கம
லாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரி
த்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும்,
சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட
உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா
அவன்பால் கருணை கொண்டதும்; பிறகு அதே கப்ப
லில் வந்த சக்கிரவர்த்தி "மாமா" என்பவருடன் சிநே
கமானதும்; அவருடைய விருப்பத்தின் பேரில் அவரு
டைய காஸிப்பூரில் இராமேசன் வக்கீலாய் அமர்வதெ
ன்று தீர்மானித்ததும்; காஸிப்பூர் வருமுன் இராமே
சன் அத்தீர்மானத்தை மாற்ற முயன்றதும் கமலா
அதற்குச் சம்மதியாது திடமனதாய் இருந்ததும்;
பிறகு இருவரும் காஸிப்பூர் வந்ததும்; வந்தபின் கல்
கத்தாவுக்குப் போய் தன் காரியங்களை முடித்துக்
கொண்டு காஸிப்பூரில் வசிப்பது என்று இராமேசன்
புறப்பட்டுச் சென்றதும்; இராமேசன் கல்கத்தாவுக்
குப் போய் வந்ததும், பின்பு கமலாவுடன் தனிக்குடி
த்தனம் செய்ய ஆரம்பித்ததும், சென்ற சஞ்சிகை
களிலுள்ள கதை]

இராமேசன் பேச்சை நிறுத்த மனமின்றி "தூளிக்கு மரியாதை தெரிகிறதா? உன்னையும் என்னையும் வித்தியாசம் காட்டாமல் அழுக்காக்குகின்றது."

"நான்தான் இந்த தூளியில் இருக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் ஏன் இங்கு இருக்க வேண்டும்?"

மற்ற வேலைக்காரர்கள் காதிற் படாத தாழ்ந்த குரலில், இராமேசன்:"நானும் உன்னுடன் எல்லாவற்றையும் அநுபவிக்க வேண்டாமா. வேலையையும் மற்றையதையும்." கமலாவின் கன்னங்கள் சற்று சிவந்தன. பதில் சொல்லாமல் ஒதுங்கி உமேசனைப் பார்த்து, "உமேசா, இங்கே இன்னொரு குடம் ஜலம் விட்டுக் கழுவவேண்டும்; இன்னும் எவ்வளவு அழுக்கு இருக்கிறதுபார்; இந்தா, அந்த வாரிகலை எடு" என்று வாரிகலை வாங்கி பெருக்கத் துடங்கினாள்.

இம்மாதிரி இழிவான தொழிலைக் கமலா செய்வதைக்கண்ட இராமேசன் மனம் வருந்தி "இதென்ன, கமலா, இதென்ன காரியம்" என்னுமுன் அவன் பின்புறத்திலிருந்து,

"ஏன் இராமேசபாபு, வேலை செய்வதில் இழிவு உண்டா, என்ன? ஆங்கிலப்ப டிப்புப் படித்த நீங்கள் சமத்வம் என்று பேசுகிறீர்களே, அப்படியானால் பெருக்குவது ஒரு இழிவான காரியம் என்றால் வேலைக்காரனை மட்டும் அந்தக் காரியத்தைச் செய்யத் சொல்லலாமோ? அவ்வளவு நான் படித்திராவிட்டாலும் என்னைக் கேட்டால் இதுதான் சொல்வேன். குடித்தனக்காரி வாரிகலும் கையுமாய் வேலை செய்வதைக் கண்டால் அந்த வாரிகல் என் கண்களுக்கு சூரிய கிரணங்கள் போல் பரிசுத்தமாய் தோன்றுகிறது. (கமலாவைப் பார்த்து) தோட்டக்காட்டை ஒரு மட்டாய் சீர்திருத்தியாயிற்று; எங்கெங்கே காய்கறிப் பாத்திகளை அமைக்கவேண்டும் காட்டுவா" என்று அழைத்தார்.

"ஒரு நிமிஷம் இரும், மாமா இந்த அறையை இன்னும் சுத்தம் செய்தாகவில்லை" என்று கமலா மறுபடி வேலை செய்யலானாள்.

அந்த அறையை நன்றாய் பெருக்கியானதும் தன் இடுப்பில் சுற்றி யிருந்த புடவைத் தலைப்பை அவிழ்த்து தலைமீது இட்டு மாமாவுடன் எங்கெங்கே என்ன காய்கறிப் பாத்திகளை அமைப்பது என்பதைப் பற்றிப் பேசிக்கொண்டே வெளியே வந்தாள்.

இவ்விதம் அன்று பொழுது போயிற்று. ஆனாலும், கமலாவுக்கு வீட்டை சுத்தம் செய்தது போதாது, இன்னும் நன்றாகச் செய்யவேண்டும், என்றே தோன்றிற்று. வெகுகாலம் கவனியாதிருந்த வீட்டை ஒருநாளில் சரியாக்க முடியுமோ; இன்னும் சில அறைகள் வசதிக்கு யோக்கியமாகவில்லை. இன்னும் சுத்திசெய்து காற்றோடும்படி கத

வுகளைத் திறந்துவைத்தாலொழிய அவைகள் பிரயோஜனப்படாவென்று தோன்றிற்று. ஆகவே, இராமேசனும் கமலாவும் இன்னொருநாள் மாமா வீட்டில்தான் இருக்கவேண்டும் என்று ஏற்பட்டது. 'இராமேசனுக்கு அதனால் அதிக வருத்தம், அன்று முழுவதும், எப்போது சாயங்காலமாகும், கமலாவுடன் என் சிறுவீட்டில் தனித்து இருப்போம்? என் மனதை வெளியிட்டு விளக்கொளியில் அவள் முகத்தில் புன்னகையும் வெட்கமும் கலந்து தோன்ற அவளருகில் இன்புற்று அமர்ந்திருக்கப் போகிறேன்? என்று நினைத்தபடி முடியவில்லையே, இன்னும் மூன்றுநாளாகும் போலிருக்கிதே! வக்கீல்வேலையில் அமர்வதில் தவக்கப் படக்கூடாது! ஆகையால் அதற்குள், அலஹாபாத்திற்குச் சென்று "ஸநந்த்" வாங்கி வரவேண்டும் என்று உடனே புறப்பட்டான் இராமேசன்.

'மாமா'வும் இரண்டு நாளில் அல்லாஹாபாத்திற்கு தன் மூத்த பெண் 'விது'வைப் பார்த்து வரப் புறப்பட்டார்.

அவர் புறப்படும்நாட்காலையில் கமலா தன் புது வீட்டிற்கு சைலஜாவை விருந்திற்கு அழைத்தாள். சைலஜாவும் விபினருக்கு சாப்பாடு போட்டு ஆபீசுக்கு அனுப்பிவிட்டு கலவாலின் வீட்டிற்கு வந்தாள்.

இரண்டு பேருமாய் உமேசனும் உதவ, சிற்றுண்டிகள் செய்து வேப்ப மரத்தடியில் கொண்டு போய் வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். சாப்பாடு ஆனபின் அங்கே அன்று பொழுது போக்குவதென்று மரத்தடியிலேயே பேசிக் கொண்டு இருந்தார்கள். நிழலடியில் சூரிய வெப்பம் அதிகம் இல்லாத குளிர்ந்த இடத்தில் ஆற்றங்கரையும் அப்புறத்தில் சோலையும் கண் முன் களி கொடுக்க, கமலாவின் மனம் உல்லாசமாய் பேச்சில் ஆழ்ந்தது. அவள் மனதைக் கவர்ந்து பரந்திருந்த பேராவல் அடங்கி தூரத்தில் வானில் தோன்றும் பருந்து போல் நீல மண்டலத்தில் கரும்புள்ளி போல் சிறுத்துத் தோன்றியது.

அன்று சாயங்காலமாகும் முன்னமேயே சைலஜா தன் வீட்டிற்குப் புறப்படத் தொடங்கினாள், கணவன் ஆபீஸிலிருந்து வந்து விடுவார் அதற்குள் வீட்டிற்குப் போக வேண்டுமென்று.

"வழக்கத்தை விட்டு ஒரு நாள் மாறி நடக்கக் கூடாதா" என்றாள் கமலா. பதில் ஒன்றும் உரையாமல், சைலஜா தலையை மட்டும் அசைத்து விட்டு கமலாவின் கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சிய பின், இருட்டுமுன் நீயும் வர வேண்டுமென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

கமலாவின் வீட்டு வேலை முடியும் போது சூரியன் அஸ்தமித்தாகவில்லை; தலையில் ஒரு சால்வையைப் போர்த்து மூடிக்கொண்டு ஆற்றங்கரையின் மேட்டுக்கரையின் பின்புறமாய் சூரியன் அஸ்தமிப்பதைப் பார்க்க வேப்ப மரத்தடியில் உட்கார்ந்தாள் கமலா. ஆற்றிலிருந்த மீன் படகுகள் செவ்வானத்தில் கரு நிறமாய் எழுதப்பட்ட சித்திரங்கள் போல் தோன்றின.

அவளுடன் பேசி அவளைக் களிப்புறச் செய்ய வேண்டுமென்று உமேசன் அங்கே வந்து பேச ஆரம்பித்தான். "நீங்கள் வெத்திலை போட்டுக் கொண்டு வெகு நேரமாயிற்றே, அம்மா" என்று. "அந்த வீட்டிலிருக்கும்போது வெத்திலை தயார் செய்து வைத்திருந்தேன். (வெத்திலையை காலிக்கட்டி பாக்கு, இலவங்கம் முதலியவை சேர்த்து டட்டியாகக் கட்டி வைப்பது பெங்காளிகளின் வழக்கம்.) இதோ பாருங்கள்" என்று காகிதத்தில் சுற்றி வைத்திருந்த வெத்திலைப்பட்டியை நீட்டினான் உமேசன்.

"சக்கிரவர்த்தி மாமா உங்களுக்காக வண்டியை அனுப்பியிருக்கிறார்" என்றான் உமேசன்.

அந்த வீட்டிற்குப் புறப்படு முன் பங்களாவை ஒரு தரம் சுற்றி நோக்கினாள். ஆங்கில சம்பிரதாயத்தில் அமைக்கப்பட்ட கணப்பு ஒன்று பிரதான அறையில் போடப் பட்டிருந்தது. குளிர் காலத்தில் அந்த கணப்பை எரியவிடலாம்; அந்த கணப்பின் மேல்கட்டியில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கமலா அதன் பக்கத்தில் அந்த வெத்திலைச் சுருளை வைத்துவிட்டு மற்ற அறைகளைப் பார்த்து வருவதற்காகத் திரும்பும்போது ஒரு காகிதக் கட்டின் மேல் இராமேசன் கையெழுத்தில் தன் பெயர் வரையப்பட்டிருந்தது அவள் கண்ணில் பட்டது.

"இது எங்கிருந்தது; உமேசா?" என்று கேட்டாள் கமலா.

"யஜமானர் அறையில் ஒரு மூலையில் கிடந்தது. பெருக்கும்போது அதைப் பொருக்கியெடுத்து வைத்தேன்."

கமலா அதைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தாள். இராமேசன் ஹேமநளினிக்கு தன் உள்ளத்தின் அந்தரங்க நிலைமையை எடுத்துரைத்து எழுதிய கடிதம் அது; அதை அப்படியெறிந்தது, அவன் எவ்வளவு அஜாக்கிரதையாய் இருந்தான் என்பதை நன்கு விளக்குகின்றதன்றோ?

காகிதத்தை முடிய வாசித்துப் பார்த்தாள்.

"என்ன, அம்மா, திகைத்து நிற்கிறீர்கள், இருட்டுமுன் புறப்பட வேண்டாமா" என்றான் உமேசன். பதில் பேசவில்லை; குண்டூசி விழினும் அந்த சப்தம் காதில் விழும், அவ்வளவு நிச்சப்தமாய் இருந்தது அந்த அறை. கமலாவைப் பார்த்த உமேசன் பயந்து போய் "என்ன, அம்மா, நான் சொல்வது உங்கள் காதில் படவில்லையே, வீட்டுக்குப் போக வேண்டாமா, நாழிகையாகிறதே," என்று கெஞ்சினான். அவள் அசையவில்லை. "மாமா"வின் வேலைக்காரர்களில் ஒருவன் உள்ளே வந்து "நாழிகையாகிறது; வண்டி வெகு நேரமாய் காத்துக் கொண்டிருக்கிறது" என்று சொல்லும் வரை கமலா ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தாள்.

"உன் உடம்பு சௌக்கியமாக இல்லையா? தலை வலியா, என்ன?" என்று சைலஜா கமலாவைக் கண்டவுடன் விசாரித்தாள். "இல்லை, ஒன்றும் இல்லை; மாமா எங்கே" "அக்காவைப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று அம்மா அல்ஹாபாத்திற்கு அனுப்பிவிட்டாள். அக்காவுக்குக் கொஞ்ச நாளாய் உடம்பு சுகமில்லை."

"எப்பொழுது திரும்பி வருவார்?"

"ஒரு வாரத்திற்குக் குறையாதாம்; ஆனாலும் இப்படி விடாமல் வேலை செய்து உடம்புக்கு

கெடுதல் விளைவித்துக் கொள்ளக் கூடாது. அதிக சிரமப்பட்டிருக்கிறாய்; சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்."

சைலஜாவுக்கு எல்லாவற்றையும் தெரிவித்து அவளுடன் கலந்து யோசிப்பது தான் கமலாவுக்கு இத்தருவாயில் நன்மருந்தாக இருக்கும் என்றாலும், அவளுடன் கலந்துபேச கமலாவுக்கு மனம் வரவில்லை; எல்லாரையும் விட்டு விட்டு சைலஜாவிடமா தான் கணவன் என்று கருதிய புருஷன் தன் கணவன் அல்ல என்பதைத் தெரிவிப்பது?

கமலா தன்னறையுட்போய் கதவை மூடிவிட்டு விளக்கருகில் உட்கார்ந்து, இராமேசன் கடிதத்தை மறுபடியும் வாசித்துப் பார்த்தாள்.

யாருக்கு எழுதப்பட்டது அந்தக் கடிதம், என்று அவளுடைய பெயர் விலாசம் ஒன்றும் அந்தக் காகிதத்திலிருந்து தெரியவில்லை. ஆனால் ஒரு யுவதிக்கு எழுதப்பட்டது அது என்பதும், அவளுக்கும் இராமேசனுக்கும் கல்யாணம் நிச்சயமாயிருந்தது என்பதும், கமலா இருப்பதனால் அந்தக் கல்யாணம் நடைபெறாது தடையுற்றது என்பதும் அதினின்றும் விளங்கிற்று; மேலும் அவளிடம் இராமேசனுடைய முழுக் காதலும் இருந்தது என்பதை இராமேசன் மறைத்தொளிக்கவில்லை; கமலா அகதியாய் விடுவாள் என்ற வருத்தமே அந்தக் கல்யாணம் நடைபெறாது நிற்பதற்குக் காரணம் என்பதும் தென்பட்டது.

தான் இராமேசனை முதல் முதல் அந்த மணற்திட்டில் சந்தித்தது தொடங்கி, அவர்கள் இருவரும் காஸிப்பூர் அடையும் வரை நேர்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் ஒன்றொன்றாய் நினைத்துக் கொண்டாள் கமலா. இதுவரை அவளுக்கு விளங்காதிருந்த தெல்லாம் இப்பொழுது நன்கு விளங்கின. ஆதி முதல் இராமேசனுக்கு கமலா தன் மனைவியல்ல என்பது தெரியும்; என்ன செய்வது என்று தெரியாமல், அவள் தன்னை கணவனெனக் கருதுகிறாளே, இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வது என்று பலவாறு முயன்று, யோசித்து, இறுதியில் அவளுடன் இருந்து சிநேக பாவமாகவே வாழ் நாட்களைக் கழிப்பது என்று நிச்சயித்து விட்டான் போலும்.

வெட்கமும் துயரமும் ஈட்டிபோல் அவளது மனதை ஊடுருவிப் பாய்ந்தன. ஒவ்வொரு சமாசாரமும் ஞாபகத்திற்கு வரவே அப்படியே கீழே விழுந்துவிட்டால் நலமென்று தோன்றிற்று கமலாவுக்கு; இந்த அவமானம் வாழ் நாள் முடியத் தொடர்ந்து வருமே; இதினின்றும் தப்ப வழியில்லையே.

கதவைத் திறந்து வெளியே சென்று தோட்டத்திற்குள் புகுந்தாள் கமலா; ஆகாயத்தில் கரும்பளிங்குகளால் அமைக்கப்பட்ட சவமேடை போல் இருண்டு மெய் விதிர்க்கும்படி ஜில்லிட்டு பளபளத்து விளங்கிற்று குளிர்க் காலத்து இருள் வானம். ஒரு மேகமா, மங்கலா ஒன்றும் இல்லை; நக்ஷத்திரங்கள் மட்டும் அந்த இருள் வானில் பிரகாசித்தன. முன்புறமாய் இருந்த இளமாஞ் செடிகளின் வரிசை இந்த இருளை இன்னும் பயங்கரமாகச் செய்வித்தது! அவள் மனத்தின் கண்ணும் அந்தரத்திலிருந்து தப்புவதற்கு ஒரு வழி தோன்றவில்லை. ஜில்லிட்டிருந்த புல் தரையில் அப்படியே சாய்ந்து உட்கார்ந்தாள் கமலா. கண்ணீர் வடிக்காமல் வாய் திறவாமல் அசையாமல் அப்படியே ஒரு சித்திரப் பதுமை போல்.

பொழுது போனது அவளுக்குத் தெரியவில்லை.; வர வர குளிர் அவளுடைய உடலுள் புகவே, மெய்சிலிர்த்தாள்; அப்புறம் தேய் பிறைச் சந்திரன் அந்த மாமரங்களினிடையே இருளைப் பிளந்து கொண்டு மெள்ள எழத் தொடங்கவே, கமலாவும் மெள்ள எழுந்து தன்னறையுள் போய் கதவை மூடினாள்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலயன்.

என்கிற கொற்கைச் சிங்களவன், ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கில பாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையான நாடகம்; அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த் தமைத்தது.　　விலை அணு 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவைய்யா, பி. எ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10-படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து, சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.　　விலை ரூபா 2.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

இனும்!　　இனும்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தேன்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

"சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமான பல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதாரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

ஆரிய சரித்திரம்.

நீதிக் கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப்படங்களும் அமையப்பெற்றது, நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரதகதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தை விரிவாகவும் அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும், பள்ளியிற்பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும், ஏனையோருக்கும் மகாபாரதக்கதை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆறுமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டு பண்ணும். சகல நீதிகளும் அமையப்பெற்றது.

விலை ரூ. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மொரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ. 2½	முதல்	ரூ. 3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½	முதல்	ரூ. 6	வரை
9½ ,,	× 40"	,, 3	,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.